

# திராவிட மாடல் அரசு

96

**பன்னீர் பெருமாள்**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

# முதல்வர் படைப்பகம்!

## திராவிட மாடல் அரசின் ‘பகிர்ந்த பணியிடம்’

1946-ஆம் ஆண்டு, ‘திராவிட நாடு’ இதழில் பேரறிஞர் அண்ணா, “எந்த நேரத்திலும், எந்தத் தொழில் தொடங்கும் வாய்ப்பும் கரம்சந்திற்கு கிடைக்கும், அதே வாய்ப்பு கருப்பண்ணனுக்கு கிடைக்காது’’என்று எழுதினார். ஆம், அன்றைய நிலையில், தொழில்முயற்சி என்பது சாமானியத் தமிழர்களுக்கு பெரும் கனவாக இருந்தது என்பதையே அண்ணா அவ்வாறு குறிப்பிட்டார்.

பேரறிஞர் அண்ணா காலத்திற்குப் பிறகு, முத்தமிழறிஞர் கலைஞர் தன் ஆட்சியில், 1970-இல் சிட்கோ தொழிற்பேட்டைகளையும், 1971-இல் தமிழ்நாடு தொழில்துறை மேம்பாட்டுக் கழகத்தையும் உருவாக்கி, சிறு குறு நிறுவனங்களை ஊக்குவித்து, பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு உதவினார். அதன் மூலம் பல தொழில்முனைவோர்களையும் உருவாக்கினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் செயல்படும் நம் அரசு, புதிய தொழில் நுட்பங்களையும் புத்தாக்கத் தொழில்களையும் ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு முழுவதும், தொழில்முனைவோர்களை உருவாக்க முனைப்புக் காட்டி வருகிறது. அந்த வளர்ச்சியின் சான்றுதான், இந்தியாவிலேயே அதிக புத்தாக்க நிறுவனங்களைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு உருவாகியிருப்பது.

### வளர்ச்சியின் பகுதி

புத்தாக்கத் தொழில்முனைவோர்கள் உருவாக வேண்டும் என்றால், தொழிலின் அனைத்து மட்டத்திலும் அவர்களுக்கு உகந்த சூழல் அமைய வேண்டும். அதை உருவாக்கித் தரும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ள திட்டம்தான் **‘முதல்வர் படைப்பகம்’**.


**‘எல்லோருக்கும் எல்லாம்’** என்ற நோக்கத்துடன் செயல்படும் திராவிட மாடல் அரசு, தொழில் நிறுவனம் நடத்த அலுவலக வசதி இல்லாதவர்களும், புதிய தொழில்களை உருவாக்க வாய்ப்பு தேடிக் கொண்டிருப்பவர்களும் பயன்படுத்தும் இடமாக முதல்வர் படைப்பகத்தைச் செயல்படுத்தியுள்ளது.


2023-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், வட சென்னை வளர்ச்சித் திட்டம் என்கிற மாபெரும் திட்டத்தை அறிவித்த நம் முதலமைச்சர் அவர்கள், அடுத்த மூன்று ஆண்டுகளில் வட சென்னை வளர்ச்சிக்கு என 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்




எனவும் அறிவித்தார். இந்தத் திட்டத்தின் வழியாகப் பல பணிகள் நிறைவேறி வரும் நிலையில், புத்தாக்கத் தொழில்முனைவோர் பயன்படுத்தும் வகையில், உருவாக்கப்பட்டுள்ளது தான் **‘முதல்வர் படைப்பகம்’**. பகிர்ந்த பணியிட மையமாக (Co-working Space) இந்த மையம் செயல்படும்.

முதல்வரின் தொகுதியான கொளத்தூர் ஜெகந்நாதன் தெருவில் ‘முதல்வர் படைப்பகம்’ என்ற இந்தப் பகிர்ந்த பணியிட மையம் (CO-WORKING SPACE) அமைக்கப்பட்டுள்ளது. ரூ.2.85 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மையத்தை ‘திராவிட மாடல் நாயகர்’ முதல்வர் அவர்கள் 04.11.2024 அன்று திறந்து வைத்தார்.





### தேர்வாணையத் தேர்வுகள்

இங்கு, புத்தொழில் தொடங்குவோர் குறைந்த கட்டணத்தில் தங்களின் அலுவலகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். தவிர, ஆட்சிப்பணித் தேர்வு, பணியாளர் தேர்வாணையத் தேர்வு உள்ளிட்ட பல்வேறு வகையான போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்கள் குறைந்தக் கட்டணத்தில் படிக்கும் சூழலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முதல்வர் படைப்பகக் கட்டடம் தரைத்தளம் மற்றும் 2 மேல் தளங்களைக் கொண்டுள்ளது. அனைத்துத் தளங்களிலும் குளிர்சாதன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மையத்தைப் பயன்படுத்துபவர்களுக்கு கட்டணமில்லாத வகையில், இணைய வசதி அளிக்கப்படுகிறது.

### பகிர்ந்த பணியிட சேவை

தரைத்தளத்தில் ‘பகிர்ந்த பணியிட சேவை’ வழங்கப்படுகிறது. இங்கு மென்பொருள் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்த நிறுவனம் நடத்துவோர் 38 பேர் பணியாற்றும் வகையில் இருக்கைகள், மேஜைகள் அமைக்கப்பட்டுள்ளன. 4 மற்றும் 6 இருக்கைகள் கொண்ட 3 ஆலோசனைக் கூடங்கள் உள்ளன. 6 பேர் அமரும் வகையில் சோபா இருக்கைகள் அமைக்கப் பட்டுள்ளன. பகிர்ந்த பணியிடத்தை ஒரு நபர் அரை நாள் பயன்படுத்த ரூ.50, முழு நாளுக்கு ரூ.100, மாதம் முழுவதும் பணியாற்ற ரூ.2,500 கட்டணம்.

முதல் தளம் கல்வி மையமாகச் செயல்படுகிறது. இங்கு ஒரே நேரத்தில் 51 பேர் அமர்ந்து படிக்கும் வகையில், வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்தத் தளத்தைப் பயன்படுத்த இரண்டரை மணி நேரத்துக்கு ரூ.5 கட்டணம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

டி.என்.பி.எஸ்.சி, யு.பி.எஸ்.சி, ஆர்.ஆர்.பி, நீட் உள்ளிட்ட போட்டித் தேர்வு மாணவர்கள் பயன்படுத்தும் வகையில், நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. இணையத்தில் தகவல் தேடுவதற்கு வசதியாக 3 கணினிகள் நிறுவப்பட்டுள்ளன. மடிக்கணினி (Laptop) இருந்தால், அதையும் இங்கு கொண்டு வந்து பயன்படுத்தலாம்.

### இருக்கை வசதிகள்

வீட்டில் படிக்கும் சூழல் இல்லாத மாணவர்களுக்கு இடையூறு இல்லாத வகையில், அமைதியான சூழலையும் நீண்ட நேரம் இருந்து படித்தாலும் முதுகு வலி போன்ற பிரச்சினைகள் வராத வகையில், இருக்கை வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

கூட்டங்கள் நடத்துவதற்கு ஏற்ப அமைக்கப் பட்டுள்ள மூன்று அரங்குகளில், 4 பேர் அமரும் அரங்கம் ஒரு மணி நேரத் துக்கு 150 ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. 6 பேர் பயன்படுத்தும் அரங்கத்துக்கு ஒரு மணி நேரத்துக்கு 250 ரூபாய் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**பகிர்ந்த பணியிட வசதிகள் என்பது பெரு நிறுவனங்களுக்கு மட்டுமே என்ற நிலைகளை மாற்றி, வடசென்னை பகுதியில் இருந்து தொடங்கப்படும் புத்தாக்கத் தொழில் முனைவோரும் எளிதாகப் பயன்படுத்தலாம்**

இந்த மையத்தை பயன்படுத்த, இதற்கென உருவாக்கப்பட்டுள்ள பிரத்யேக இணையதளப் பக்கத்தில் முன்பதிவு செய்ய வேண்டும்.

### எல்லோருக்கும் எல்லாம்

இந்த மையத்தை முதல்வர் திறந்த முதல் நாளே, தொழில்முனைவோர்களும், மாணவர்களும் பயன்படுத்தத் தொடங்கி விட்டனர். அது குறித்த மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்ட செய்திகளே ‘எல்லோருக்கும் எல்லாம்’ எனச் செயல்படும் அரசின் சாதனை.

பகிர்ந்த பணியிட வசதிகள் என்பது பெரு நிறுவனங்களுக்கு மட்டுமே என்ற நிலைகளை மாற்றி, வடசென்னை பகுதியில் இருந்து தொடங்கப்படும் புத்தாக்கத் தொழில் முனைவோரும் எளிதாகப் பயன்படுத்தலாம் என்கிற நிலையை இந்த மையம் உருவாக்கியுள்ளது. அன்று பேரறிஞர் அண்ணா கண்ட கனவை, கலைஞர் வழியில் அமைந்த நம் திராவிட மாடல் அரசு நனவாக்கியுள்ளது. நவீன வடிவில் தொழில்துறையை வளர்த்தும் வருகிறது. அதன் ஒரு வடிவம், வட சென்னையில் வெற்றி பெற்றுள்ளது.

...சாதனை தொடரும்

## சூரிய மின்சாரமும் தமிழ்நாடும்...

அதானி நிறுவனத்தின் மீது, அமெரிக்காவில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த விவகாரத்தில் தமிழ்நாட்டு நிலை குறித்து, விளக்கத்தை வெளியிட்டுள்ளார், அரசியல் விமர்சகர் சூர்யா சேவியர்.

“அ.தி.மு.க. ஆட்சியில்தான் அதானி நிறுவனத்துடன் நேரடி ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. ஆனால், கடந்த மூன்றாண்டுகளில் தி.மு.க. அரசு அதானி நிறுவனத்துடன் எந்தவிதமான ஒப்பந்தமும் மேற்கொள்ளவில்லை” என்கிறது அவரது பதிவு.

“ஒவ்வொரு மாநிலமும் ஆண்டுதோறும் நுகர்கின்ற மொத்த மின்சாரத்தில் குறிப்பிடத்தக்க அளவு புதுப்பிக்கத்தக்க மின்சக்தியைப் பயன்படுத்த வேண்டும். தவறும் பட்சத்தில், அபராதம் செலுத்தவேண்டும் என்ற ஒன்றிய அரசு விதியின் அடிப்படையில், ஒவ்வொரு மாநிலமும் சூரிய ஒளி மின்சாரத்தை வாங்க வேண்டியுள்ளது. அப்படி வாங்காத பட்சத்தில், ஒன்றிய அரசு பல்வேறுவிதமான அழுத்தங்களை, மாநில அரசுகளுக்கு உருவாக்குகிறது. இதன் அடிப்படையில், தமிழ்நாடு மின்சார வாரியம் 2,000 மெகாவாட் சூரிய ஒளி மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய ‘சோலார் எனர்ஜி கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா’ (SECI) என்ற ஒன்றிய அரசு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

மின் கொள்முதலுக்கான விலை நிர்ணயத்தை, ஒன்றிய அரசு நிறுவனமே செய்கிறது. அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு யூனிட்டுக்கு 7.25 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டது. தி.மு.க. ஆட்சியில் ஒரு யூனிட்டுக்கு 2.61 ரூபாய் என தமிழ்நாடு அரசு ஒப்பந்தம் செய்திருக்கிறது.

தங்களின் மின்தேவைகளுக்காக மின்சாரத்தை விலை கொடுத்து வாங்கும் மாநில மின்வாரியங்களைக் கண்டறிந்து, அதானி நிறுவனத்திடமிருந்து பெற்று மின்சாரத்தை அவர்களுக்கு விற்கும் புரோக்கராக எஸ்.இ.சி.ஐ செயல்பட்டது என அமெரிக்க நீதிமன்றம் குறிப்பிடுகிறது. அரசு அதிகாரிகளுக்கு அதானி குழுமம் லஞ்சம் வழங்கியது என்றால், எந்த நிறுவனத்தின் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டது என்பதைத்தான் விசாரிக்க வேண்டும்” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்





ஆ.கரிகாலன்

### கண் கலங்கி வாழ்த்திய தலைவர்!

1980-ஆம் ஆண்டு ஜெயங்கொண்டம் நகரில், தலைவர் கலைஞர் தலைமையில் என் தந்தையின் மணவிழா நடைபெற்ற போது, திருமணத்தில் “மணமகன் ஆறுமுகம் எனது கட்சித் தொண்டன், அவர் மாற்றுத்திறனாளி என்றும் பாராமல் மணம் முடிக்க சம்மதித்த மணமகள் சரோஜாவிடம் நான் தோற்று விட்டேன்” எனக் கூறி, வாழ்த்தி இருக்கிறார் தலைவர். நிகழ்வில், தலைவர்கள் அன்பில் தர்மலிங்கம், அரியலூர் ஆறுமுகம் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். எனக்கு ‘கரிகாலன்’ எனப் பெயர் சூட்டியதும் தலைவர் கலைஞரே. பேராசிரியர் அவர்கள் எனது சகோதரிக்கு ‘பூங்கொடி’ எனப் பெயர் சூட்டினார்.

**– ஆ.கரிகாலன், அமைப்பாளர், நகர இளைஞர் அணி, ஜெயங்கொண்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### மேயோ கூற்று!

1920-களில் கேத்ரின் மேயோ என்ற அமெரிக்க எழுத்தாளர் இந்தியாவைச் சுற்றிப்பார்த்து, ‘மதர் இந்தியா’ என்னும் ஆங்கில நூலை எழுதினார். இந்தியாவில் நிலவும் சாதிய, பெண்ணடிமைத்தன கொடுமைகளைப் படம்பிடித்த அந்நூலுக்கு தேசியவாதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். கோவை அய்யாமுத்து அந்நூலைத் திறனாய்வு செய்து, குடிஅரசில் தொடராக எழுதினார். அது மேயோ கூற்று மெய்யா? பொய்யா? என்ற தலைப்பில் நூலாகவும் வெளிவந்தது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

670

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026. Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.